'ஜனநாயக விழுமியங்களை காப்பாற்ற' இருவரும் இணைந்தே நடைபோடுவோம்!

# ராகுல்காந்தி பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 20-

காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் 'ஜனநாயக விழுமியங்களை காப்பாற்ற இருவரும் இணைந்தே நடைபோடுவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சகோதரர் ராகுல்காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள். இந்தியாவின் ஜனநாயக விழுமியங்களைக் காப்பாற்ற நம் முன் நெடும்பயணம் காத்திருக்கிறது. இருவரும் இணைந்தே நடைபோடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறக்கப்பட உள்ள நிலையில், திருச்சி தெற்கு மாவட்ட, கிழக்கு மாநகர மாவட்ட மாணவர் அணி சார்பில் திருச்சி சிந்தாமணி அண்ணா சாலையிலிருந்து சனிக்கிழமை கலைஞர் சுடர் தொடர் ஓட்டம் புறப்பட்டது. இதனை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர் . இந்த சுடர் தொடர் ஓட்டமானது திருவெறும்பூர், துவாக்குடி, செங்கிப்பட்டி, வல்லம், தஞ்சாவூர், அம்மாபேட்டை, நீடாமங்கலம், கொரடாச்சேரி வழியாக திருவாரூரைச் சென்றடைகிறது. திருவாரூர் விழாவில் பங்கேற்கவுள்ள தமிழக முதல்வர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கலைஞர் சுடர் வழங்கப்பட உள்ளது என தி.மு.க. நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ், மாநகர மாணவரணி அமைப்பாளர் அசாருதீன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .

திருச்சி சையது முர்துசா பள்ளியில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## மாணவர்களுடன் உணவு அருந்தினார்!

திருச்சி, ஜூன் 20 -

திருச்சி பாலக்கரையில் உள்ள சையது முர்துசா பள்ளியில் இளைஞர் நலன் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு திருச்சி வந்தார்.

இந்நிலையில் அவர் பாலக்கரை அருகே செயல்படும் முதலமைச்சரின் காலை உணவு உணவுத்திட்ட மைய சமையல் கூடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அந்த ஆய்வுக் கூடம் அருகே உள்ள அரசு சையது முத்துசா மேல்நிலைப் பள்ளியில் காலை உணவு அருந்தும் மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். பின்னர் அவர்களுடன் கலந்து உரையாடிய உதயநிதி ஸ்டாலின் பள்ளி கட்டிடம் கழிப்பறை ஆகியவற்றை சென்று பார்வையிட்டார். தொடர்ந்து பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அதில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காலை உணவு திட்டம் மாணவர்களுக்கும் முறையாக சென்று சேர்கிறதா என எந்த மாவட்டம் சென்றாலும் அங்கு சென்று ஆய்வு செய்து வருகிறேன். அனைத்து மாணவர்களுக்கும் காலை உணவு திட்டத்தை முறையாக கொண்டு செல்ல அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படுகிறது என கூறினார்.

இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மேயர் அன்பழகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



## “நீங்கள் செய்ய எண்ணியதைச் செய்து காட்டுவேன்!”

### தந்தையர் தினத்தையொட்டி முதல்வர் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 20 -

நேற்று முன்தினம் தந்தையர் தினம்!

இந்நாளையொட்டி கவிதை வடிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், “நீங்கள் (முத்தமிழறிஞர் கலைஞர்) செய்ய எண்ணியதைச் செய்து காட்டுவேன்!” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின், அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“உங்களால் கருவானேன்.**
**உங்களால் செதுக்கப்பட்டேன்.**
**நீங்கள் காட்டிய பாதையிலேயே பயணிக்கிறேன்.**
**உம்மை மனதில் நினைத்தே நித்தமும்**
**செயல்படுகிறேன்.**
**நீங்கள் செய்ய எண்ணியதைச் செய்து காட்டுவேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தந்தைபெரியார் திராவிடர் கழகம் சார்பில் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் கலைஞர் வேடம் அணிந்த தொண்டர்களின் ஊர்வலம் கோவையில் நடந்தது. நிகர் பறை இசை முழங்க கோவையில் கலைஞர் நூற்றாண்டு விழா பேரணி நடந்தது.

## 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் ஆறாம் ஆண்டு நினைவு நாள்!

சென்னை, ஜூன் 20-

'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நேற்று.

முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்த வரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் அன்பை பெற்றவருமான 'அரசு ஆர்ட்ஸ்' நிர்வாக இயக்குனர் 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நேற்று



(19.6.2023 திங்கட்கிழமை) நினைவேந்தல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி 'அரசு ஆர்ட்ஸ்' எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14, (புதுக்கல் லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெற்றது.



திருச்சிராப்பள்ளி கோர்ட்யார்ட் ஹோட்டலில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற உற்பத்தியாளர் சந்தையாளர் ஒருங்கிணைப்பு 2023 நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை நேற்று (19.06.2023) துவங்கி வைத்து உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். உடன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மண்டலத் தலைவர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக குன்னூர் ஒன்றிய தி.மு.க. சார்பில், பார்லியர் பஞ்சாயத்து, பெல்லட்டிமட்டம் பகுதியில் ஒன்றிய செயலாளர் ஜெ.பிரேம்குமார் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் இணைந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஆர்.பி.பரமேஷ்குமார், க.ம.தமிழ்செல்வன், லட்சுமி, எம்.சதகத்துல்லா, சுனிதா நேரு, பார்லியர் ஏ.கே.வி.தீனதாயாளன், கருணாநிதி மகாலிங்கம், சர்தார் பாட்ஷா, ராமசாமி, ஜோசப், மகேஸ்வரி, ஜெயக்குமார், மார்ட்டின், செந்தில், மணிகண்டன், ரஜினிகாந்த், ராதா, ஜெகதல பங்கஜம், கிருஷ்ணகுமார், முருகவேல், மோசஸ், தினேஷ் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.





வான்புகழ் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம் அமைத்தார் கலைஞர்.
நம் கண்கண்ட தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு
திருவாரூரில் கலைஞர் கோட்டம் அமைத்த
அறக்கட்டளையினருக்கு நன்றி ! நன்றி !!
அதன் திறப்பு விழாவிற்கு வருகை தரும்
கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க. ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!

அக்ரி கணேசன், Msc.,(Agri),
தலைமை தீர்மானக்குழு செயலாளர், திமுக